விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 30 ஞாயிறு 13.06.2021 மலர் - 2, இதழ் - 68

# டாஸ்மாக் - சங்கடத்தில் தி.மு.க.

தமிழகத்தில் கொரோனா தொற்றின் தாக்கம் கடந்த சில நாட்களாக குறைந்து வருகிறது. இருப்பினும் சராசரியாக 15 ஆயிரத்திற்கும் அதிகமான பாதிப்புகள் இருந்து வருகின்றன. எனவே, கொரோனா தொற்று பாதிப்பை குறைக்க ஊரடங்கை சில தளர்வுகளுடன் ஜூன் 21 வரை தமிழக அரசு நீட்டித்துள்ளது. அந்தத் தளர்வுகளில் ஒன்றாக, தமிழகத்தில் 11 மாவட்டங்களை தவிர்த்து எஞ்சிய 27 மாவட்டங்களில் டாஸ்மாக் கடைகளை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்க தமிழக அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கு பல தரப்பில் இருந்தும் பலத்த எதிர்ப்பு எழுந்துள்ளது.

கடந்த ஆண்டு அ.தி.மு.க ஆட்சியின் போது, கொரோனா சூழலில் டாஸ்மாக் கடைகளை திறக்க எதிர்ப்பு தெரிவித்து அன்றைய எதிர்கட்சித் தலைவரும் இன்றைய முதல்வருமான ஸ்டாலின், தி.மு.க எம்.பி கனிமொழி உள்ளிட்ட தி.மு.கவினரும் அவர்களது கூட்டணிக் கட்சியினரும் போராட்டம் நடத்தினர். 'ஊரடங்கு காலத்தில் மதுக்கடைகள் எதற்கு' என ஒரு கையில் தட்டி மறு கையில் கறுப்புக்கொடி என ஸ்டாலின் நின்றார். ஆனால், அதே ஸ்டாலின் தலைமையிலான அரசு, தற்போதுள்ள கொரோனா ஊரடங்கு காலத்தில் டாஸ்மாக்கை திறக்கிறது. இதற்கு பா.ஜ.க, பா.ம.க, பொதுமக்கள் என பல தரப்பில் இருந்தும் பலத்த எதிர்ப்பு பெருகியுள்ளது. மேலும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மது தயாரிப்புத் தொழிற்சாலைகள், மதுக்கூடங்களை மூடுவோம் என கூறிய கனிமொழி, தற்போது தன் அண்ணனிடம் அதை செய்ய சொல்லி கேட்பாரா என்றும் கேட்டுள்ளனர்.

கடந்த ஆட்சியின் போது டாஸ்மாக் கடை திறப்பதற்கு எதிராக குடியை கெடுக்கும் அ.தி.மு.க மற்றும் குடிகெடுக்கும் எடப்பாடி உள்ளிட்ட ஹேஷ்டேக்குள் டிரெண்ட் செய்யப்பட்டன. அதே போன்று, தற்போது, குடிகெடுக்கும் ஸ்டாலின், குடியை கெடுக்கும் தி.மு.க உள்ளிட்ட ஹேஷ்டேக்குகளை நெட்டிசன்கள் டிரெண்டிங் செய்து வருகின்றனர்.






# விவசாயிகளுக்கு இழப்பீடு

தமிழகத்தில், கடந்த 2020ல் இயற்கை பேரிடரால், விவசாயிகளுக்கு பயிர்கள் பாதிப்பு, மகசூல் இழப்பு ஏற்பட்டது. பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், தற்போது 66 ஆயிரத்து 540 விவசாயிகளுக்கு 35.2 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டு உள்ளது. முக்கியமாக இதில் தஞ்சாவூர், திருவாரூர், உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் உள்ள, 38,962 விவசாயிகளுக்கு அதிகபட்சமாக, 20.6 கோடி ரூபாய் இழப்பீடாக கிடைத்துள்ளது.



# மாபியாக்களின் பிடியில் டில்லி அரசு

ரேஷன் பொருட்களை வீடுகளுக்கே நேரடியாக, டெலிவரி செய்யும் திட்டத்தை செயல்படுத்த, டில்லி மாநில அரசு திட்டமிட்டிருந்தது. இதனை மறுபரிசீலனை செய்ய டில்லி துணை நிலை கவர்னர் கூறினார். ஆனால், துணை நிலை கவர்னர் இத்திட்டத்திற்கு அனுமதி மறுத்ததாக கெஜ்ரிவால் தரப்பு கூறுகிறது.

இந்நிலையில், இது குறித்து மத்திய சட்ட அமைச்சரும், பா.ஜ., மூத்த தலைவருமான ரவிசங்கர் பிரசாத் கூறுகையில், 'கொரோனா காலத்தில் டில்லியில் வாழும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஆக்சிஜனையே முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலால் தர முடியவில்லை. இவர்களால் ரேஷன் பொருட்களை மட்டும் எப்படி வீடுவீடாக கொண்டுபோய் தந்து விட முடியும். அவர்கள், வீடுகளுக்கே ரேஷன் பொருட்களை கொண்டு சென்று கொடுப்பதாக கூறுவது பொய்யானது. டில்லி மாநில அரசு, ரேஷன் மாபியாக்களின் பிடியில் சிக்கியுள்ளது. இந்த கொள்ளையர்கள்தான், அனைத்து ரேஷன் பொருட்களையும் கட்டுப்படுத்துகின்றனர். தேசத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உதவும் வகையில், ஆதார் திட்டத்தின் அடிப்படையில், 'ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு' திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது. ஆனால், டில்லி, அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில்தான் இந்த திட்டம் அமலாகவில்லை. பொய்யான வாக்குறுதி தந்து மக்களை ஏமாற்றுகிறார் கெஜ்ரிவால். எந்த நேரமும், டிவி, சமூக ஊடகங்களில் பேசுவது மட்டுமே கெஜ்ரிவாலின் வேலை' என தெரிவித்துள்ளார்.



# இனிதே துவங்கிய தி.மு.க.வின் நில ஆக்கிரமிப்பு



திருச்சி மாவட்டம், சோபனாபுரம் கிராம பஞ்சாயத்து அலுவலகம் எதிரே அரசுக்கு சொந்தமான காலி இடம் உள்ளது. அந்த இடத்தில் பஞ்சாயத்து அலுவலக கட்டுமானத்துக்கு பயன்படுத்தியது போக எஞ்சிய சுமார் 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள கருங்கற்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை, அதே பகுதியைச் சேர்ந்த தி.மு.க ஒன்றிய கவுன்சிலர் ராமச்சந்தின், தி.மு.க பிரமுகர் சவுகத் அலி, தி.மு.க., இளைஞரணி துணை அமைப்பாளர் கண்ணன் ஆகியோரின் மேற்பார்வையில் சிலர் சில நாட்களுக்கு முன் வாகனங்களில் திருடிச்சென்றனர். இது குறித்து, காவல்துறையில் ஏற்கனவே புகார் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது காலியாக உள்ள அந்த அரசு நிலத்தை, சவுகத் அலியின் உறவினரான மதினாபீவி வேலி போட்டு ஆக்கிரமித்துள்ளார். இதற்காகத்தான் முன்னதாக அங்கிருந்த கருங்கற்களை திருடியுள்ளனர் என குற்றம் சாட்டப்படுகிறது. இது குறித்து, உப்பிலியபுரம் பி.டி.ஓ., சந்திரசேகர், காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.

# வி.சி.க. அராஜகம்



கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை கடைவீதியில் உள்ள ஸ்ரீ பட்டாபிராம மடம், மற்றும் சஞ்ஜிவிராயார் கோயில் வாசலில்,

விடுதலை சிறுத்தைகளின் முன்னாள் நகர செயலாளர் இப்ராஹிம் என்பவரின் நினைவு நாளை கொண்டா, கோயிலை மறைத்து இறந்தவரின் படம் அலங்காரம் செய்து வைக்கப்பட்டது. இதை அறிந்த பொதுமக்கள், ஹிந்துமுன்னணி பொறுப்பாளர்களிடம்

முறையிட்டனர். உடனே ஹிந்து முன்னணி போராட்டம் அறிவித்தது. இதனால், காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து அலங்கார வளைவை அகற்றி சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கும் பதிவு செய்தனர்.

# புதிய கொரோனா தடுப்பு மருந்து

தெலுங்கானா மாநிலம் ஐதராபாதைச் சேர்ந்த, பயோபோர் இந்தியா நிறுவனம், 'அவிப்டடில்' என்ற கொரோனா சிகிச்சை மருந்தை கண்டுபிடித்துள்ளது. இந்த மருந்து, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பரிசோதனை செய்யப்பட்டபோது, கொரோனா வைரசால் தீவிரமாக பாதிக்கப்பட்டோருக்கு, அவிப்டடில் மருந்து நிவாரணம் அளிப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, இந்த மருந்திற்கு, அவசர கால பயன்பாட்டு உரிமம் கோரி, இந்திய மருந்து கட்டுப்பாட்டு கழகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு உள்ளது. அனுமதி கிடைத்ததும் மருந்து தயாரிப்பு துவங்கும். கொரோனா சிகிச்சைக்கான, 'பேவிபிரவிர்' மருந்து தயாரிக்க, பயோபோர் நிறுவனம் ஏற்கனவே அனுமதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆக்ஸிஜன் செறிவூட்டி விலை குறைந்தது



கொரோனா சிகிச்சையில் முக்கிய பங்கு வகிக்கும் ஆக்ஸிஜன் தேவையை சமாளிக்க, மருத்துவ ஆக்ஸிஜன் சிலிண்டர் பயன்பாட்டுடன் ஆக்ஸிஜன் செறிவூட்டிகளும் அதிகமாக பயன்படுத்தப்பட்டன. இந்நிலையில், ஆக்சிஜன் செறிவூட்டிகளின் வர்த்தக விலை உச்ச வரம்பிற்கான நெறிமுறைகளை தேசிய மருந்து விலை ஆணையம் அறிவித்தது. இந்த விலை சீரமைப்பு மூலம், இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு நியாயமற்ற லாப வரம்பை குறைத்தது. இதனையடுத்து 104 தயாரிப்பு நிறுவனங்களும் 252 பிராண்டுகளின் இறக்குமதியாளர்களும் அதிகபட்ச சில்லரை விலையை மாற்றியமைத்து மத்திய அரசிடம் சமர்ப்பித்தனர். இவற்றில் 70 தயாரிப்புகள் மற்றும் பிராண்டின் விலை 54 சதவீதம் வரை குறைந்துள்ளது. 58 பிராண்டுகள் 25 சதவீதம் வரை விலையை குறைத்துள்ளன. 11 பிராண்டுகள் 26 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை விலையை குறைத்துள்ளன. 18 உள்நாட்டு நிறுவனங்கள் விலையை குறைக்கவில்லை. 'மாற்றியமைக்கப்பட்ட விலை கடந்த 9ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. தகவல்கள் மாநில மருந்து கட்டுப்பாட்டாளர்களுடன் பகிரப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன' என, ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# மதுரை மாவோயிஸ்டுகள்




மதுரையைச் சேர்ந்த மூன்று இந்திய கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) செயற்பாட்டாளர்கள் மீது தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ) கடந்த வெள்ளிக்கிழமை சென்னை பூந்தமல்லியில் உள்ள என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. சட்டவிரோத தடுப்பு நடவடிக்கைகள் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் விவேகானந்தன் என்கிற விவேக், மூவேந்தர் நகரைச் சேர்ந்த சுரேஷ் ராஜன் மற்றும் ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மோகன் ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சுதந்திர தினம் கொண்டாடுவது குறித்து முகநூலில் அவதூறு பரப்பிய விவேக் மீது கடந்த 2020ல் தல்லாகுளம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் இவ்வழக்கை என்.ஐ.ஏ விசாரித்தது. அப்போது, குற்றம் சாட்டப்பட்டவர்களின் சமூக ஊடகக் கணக்குகளின் பதிவுகளை ஆய்வு செய்தபோது அவர்கள் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான மாவோயிஸ்டின் சித்தாந்தத்தை பரப்பும் செயல்களில் அது தவறு என தெரிந்தே ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் அவர்கள் மாவோயிஸ்டு சித்தாந்தத்துக்கு ஆதரவாக துண்டுபிரசுரங்கள், பதாகைகள் போன்றவை மூலம் மாவோயிஸ்டுகளின் பயங்கரவாத சித்தாந்தத்தை பரப்பி வந்தனர் என்பதும் தெரியவந்துள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# போலி டெலிபோன் எக்ஸ்சேஞ்



ராணுவத்தின் கிழக்கு பிரிவில் சிலிகுரியில் பணியாற்றும் ராணுவ உயர் அதிகாரிக்கு வந்த தொலைபேசி அழைப்பில், தன்னை ராணுவ அதிகாரி என அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர், ராணுவ செயல்பாடுகள், எல்லை பகுதிகள் குறித்த தகவல்களை கேட்டுள்ளார். இதனால் சந்தேகமடைந்த அந்த ராணுவ அதிகாரி, இது குறித்து ராணுவ உளவுத்துறைக்கு தகவல் கொடுத்தார். விசாரணையில், பெங்களூரில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது அப்போது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள், கர்நாடக மாநில தீவிரவாத தடுப்புப் படை காவலர்களுடன் இணைந்து கேரளாவின் மலப்புரம் நகரைச் சேர்ந்த இப்ராஹிம்.எம்.புல்லட்டி, அவரது கூட்டாளியான தமிழகம், திருப்பூரைச் சேர்ந்த கௌதம் என்பவர்களை கைது செய்தனர். இவர்கள் பாகிஸ்தான் உதவியுடன் இந்திய ராணுவ தகவல் பரிமாற்றங்களையும், இந்திய ராணுவ அதிகாரிகளின் தகவல்களையும் சேகரிப்பதற்காக பெங்களூருவில் பி.டி.எம் லே அவுட் பகுதியில் ஆறு டெலிபோன் எக்ஸ்சேஞ்சுகளை சட்டவிரோதமாக நடத்தி வந்துள்ளனர். அதுமட்டுமின்றி, வெளிநாட்டிலிருந்து நிழலுலக தாதாக்கள் பணம் கேட்டு மிரட்ட பயன்படுத்தவும், இந்த எக்சேஞ்ச் பயன்படுத்தப்பட்டுள்ளது இதற்கு தலா 32 போலி சிம் கார்டுகளுடன் 30 அதி நவீன தொழில்நுட்ப மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

# ஆர்.டி.ஓ. அலுவலகம் செல்ல வேண்டாம்



அங்கீகாரம் பெற்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் ஓட்டுனர் பயிற்சியை முடித்தவர்கள், ஆர்.டி.ஓ., அலுவலகங்களில் வாகனங்களை இயக்கிக் காட்டாமல் ஓட்டுநர் உரிமம் பெற விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஓட்டுனர் பயிற்சி பெற்றவர்கள், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனத்தை சரியாக ஓட்டிக் காட்டினால் மட்டுமே தற்போது லைசென்ஸ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறைகளில், மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் புதிய மாற்றங்களை செய்துள்ளது. அதன்படி, அங்கீகாரம் பெற்ற ஓட்டுனர் பயிற்சிப் பள்ளிகள், 2 ஏக்கர் பரப்பளவில் பயிற்சி எடுப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும். அவர்களிடம் பயிற்சி வாகன வடிவமைப்புடன் கூடிய வசதி இருக்க வேண்டும். பயிற்சியளிப்பவர், மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றவராக இருக்க வேண்டும். லைசன்ஸ் பெற விண்ணப்பிக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு, போக்குவரத்து சின்னங்கள், விதிகள், வாகன கட்டமைப்பு, பொதுத் தொடர்பு, முதலுதவி உள்ளிட்ட வகுப்புகளை நடத்த வேண்டும். வாகனம் ஓட்டுவதற்கு கிராமம், நகரம், மேடு, பள்ளம் ஆகிய பகுதிகளில் சீராக ஓட்டுவது, வாகனத்தை பின் நோக்கி செலுத்துவது போன்றவற்றை கற்பிக்க வேண்டும். பயிற்சிக்கு பின், 'சென்சார்' ஓடுபாதையில் சோதனையில் வெற்றிகரமாக வாகனம் ஓட்டுவதை வீடியோ பதிவு செய்ய வேண்டும். இந்த சான்றுகளுடன் ஆர்.டி.ஓ., அலுவலகம் சென்று, வாகனம் ஓட்டிக் காட்டாமலேயே அவர்கள் லைசென்ஸ் பெறலாம். இந்த புதிய நடைமுறை, ஜூலை, 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

# திக்விஜய் சிங்கின் உளரல்

370 சட்டப்பிரிவு தொடர்பான பாகிஸ்தான் பத்திரிகையாளர் கேள்விக்கு பதில் அளித்த அவர், ''காஷ்மீரில் ஆர்டிக்கிள் 370 நீக்கப்பட்ட பிறகு அங்கு ஜனநாயகம் இல்லாமல் போய் விட்டது. இது ஒரு தவறான முடிவு. தாங்கள் மத்தியில் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தான ஆர்டிக்கிள் 370ஐ மீண்டும் கொண்டு வருவது பற்றி பரிசீலிப்போம்'' என கூறினார். திக்விஜய் சிங்கின் இந்த கருத்துக்கு பா.ஜ.கவின் அமித் மால்வியா, தேசிய செய்தித்தொடர்பாளர் சமித் பாத்ரா, மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி உள்ளிட்ட பா.ஜ.க தலைவர்களும், காஷ்மீர்வாசிகள், பொதுமக்கள் என பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். நெட்டிசன்களும்



திக்விஜய் சிங்கிற்கு டுவிட்டரில் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இதனால் டுவிட்டரில், #Article370, #Digvijaysingh போன்ற ஹேஷ்டாக்குகள் தேசிய அளவில் டிரெண்ட் ஆகின.

---

# ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு

கொரோனாவால் வழ்வாதாரம் இழந்து அவதிப்படும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு, உணவுப் பாதுகாப்பு, உதவித்தொகை, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்றக்கோரிய மனு, உச்ச நீதிமன்ற அமர்வில் விசாரணைக்கு வந்தது. அதனை விசாரித்த நீதிபதிகள், 'தேசிய அளவில் அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த தகவல்களை பதிவு செய்வதற்கான மென்பொருளை உருவாக்குவதில், மத்திய அரசு தாமதத்திற்கு கவலை தெரிவித்தனர். மேலும், புலம் பெயர் தொழிலாளர்கள் பணிபுரியும் இடத்தில் ரேஷன் பொருட்களை வாங்கும் வகையில், 'ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு' திட்டத்தை, மாநிலம் மற்றும்




யூனியன் பிரதேச அரசுகள் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் எழுத்துப்பூர்வ அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.




## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

9313 99006

# பறக்கும் டாக்ஸி அறிமுகம்



எரிபொருள் இல்லாமல் முற்றிலும் மின்சார பேட்டரியால் இயங்கும் குட்டி விமான டாக்சியை அமெரிக்காவில் ஆர்ச்சர் ஏவியேஷன் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. அதற்கு 'மேக்கர்' என பெயரிடப்பட்டுள்ளது. முற்றிலும் பேட்டரியால் இயங்குவதால் சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாது. ஹெலிகாப்டர் போன்றே செங்குத்தாக மேல் எழும்பும். எனவே ஓடுபாதை தேவையில்லை. மணிக்கு 240 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். 4 பேர் பயணிக்கலாம் என்பது போன்ற சிறப்பு அம்சங்கள் இதில் உள்ளன. தனது 'மேக்கர்' விமானத்திற்கு அனுமதி கோரி அமெரிக்க விமானத்துறைக்கு விண்ணப்பித்துள்ளது ஆர்ச்சர் ஏவியேஷன் நிறுவனம். மேலும், முதல் கட்டமாக 100 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள நகரங்களுக்கு இயக்கவும் கட்டணமாக, 50 கி.மீக்கு இந்திய மதிப்பீட்டில் ரூ. 4,000 வசூலிக்கவும் முடிவு செய்துள்ளது. தற்போது அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் 2024 ம் ஆண்டு தான் இந்த பறக்கும் டாக்சி பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புலிட்சரை வென்ற இந்திய வம்சாவளியினர்

உய்குர் முஸ்லீம்களுக்கான சீனாவின் தடுப்பு முகாம்களை செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அம்பலப்படுத்திய புதுமையான விசாரணை அறிக்கைகளுக்காக இந்திய வம்சாவளியைச்சேர்ந்த பத்திரிகையாளர் மேகா ராஜகோபாலன் அமெரிக்காவின் சிறந்த பத்திரிகை விருதான புலிட்சர் விருதை வென்றுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மற்றொரு பத்திரிகையாளர், நீல் பேடி, குழந்தைகளை கண்காணிக்க புளோரிடாவில் ஒரு சட்ட அமலாக்க அதிகாரி, தன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதை அம்பலப்படுத்திய தம்பா பே டைம்ஸில் ஒரு ஆசிரியருடன் இணைந்து அவர் எழுதிய விசாரணைக் கதைகளுக்காக உள்ளூர் அறிக்கையிடல் பிரிவில் புலிட்சரை வென்றார். இணைய யுகத்தில் குடிமக்கள் பத்திரிகையின் பெருக்கத்தை அங்கீகரிக்கும் விதமாக, டீனேஜ் பத்திரிகையாளர் அல்லாத டார்னெல்லா ஃப்ரேஷியருக்கு புலிட்சர் சிறப்பு மேற்கோள் வழங்கப்பட்டது. மினியாபோலிஸில் காவலர்களால் இறந்த ஆப்பிரிக்க அமெரிக்கரான ஜார்ஜ் ஃபிலாய்ட் கொல்லப்பட்டதை அவரது ஸ்மார்ட்போனில் வீடியோவாக படமாக்கியதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.





# நகரத்து காக்காவும் கிராமத்து காக்காவும்



நகரத்து காக்கா ஒன்று கிராமத்து காக்காவை பார்க்க வந்தது.

"எங்க பட்டணத்துல, பெரிய பெரிய கட்டடமா இருக்கும். இங்கே ஒரே குடிசையா இருக்கே. அங்கே காரு, பஸ்ஸுனு ஏகப்பட்ட வண்டிங்க ஓடுது. ஆனா, இங்கே கட்டைவண்டியும், சைக்கிளும்தான்..." என்று பட்டணத்து பெருமை பேசியது நகரத்து காக்கா.

'பட்டணத்துல அப்படி என்னதான் இருக்குன்னு நாமளும் போய் பார்த்துட்டு வருவோம்' என்று நகரத்து காக்காவுடன் புறப்பட்டு போனது கிராமத்து காக்கா.

"நான் சொன்ன மாதிரி எவ்வளவு கட்டடம் இருக்குன்னு பார்த்தியா... இதெல்லாம் மனுசங்க வாழ்றது..."என்றது நகரத்து காக்கா.

"ஆமாம், ஆனா, நாம வாழறதுக்கு இங்கே மரங்களையே காணோமே..."என்றது கிராமத்து காக்கா.

நகரத்து காக்கா உடனே பேச்சை மாற்றி, "கீழே பாரு... எவ்வளவு வாகனம் போகுது..."

"வாகனத்தை விடு. ஆளுங்களைப் பாரு... கரும் புகை அடிச்சு சீக்கிரமே நம்ம கலருக்கு மாறிடப் போறாங்க!" என்று 'கமெண்ட்' அடித்தது கிராமத்து காக்கா.

நகரத்து காக்கா விழித்தது. அப்போது, "உடம்பெல்லாம் புழுதியா இருக்கு. குளிக்கணும், ஆத்துக்கு கூட்டிட்டு போ..." என்றது கிராமத்து காக்கா.

ஆற்றை நெருங்கும்போது நாற்றம் அதிகரித்தது.

"ஆத்துலே குளிக்கணும்னு சொன்னா... சாக்கடையை காட்டுறே...?" என்றது கிராமத்து காக்கா.

"இந்த ஊருல இதுதான் ஆறு!"

"ஆறா...? இதுல எங்க ஊரு பன்னிக்குட்டிகூட குளிக்காது. நீ எப்படி குளிக்கிறே?"

நகரத்து காக்கா தயங்கியவாறே "மழை பெய்யும்போதுதான் குளிப்பேன்..." என்றது.

"அதுதான் உன் மேல் இவ்வளவு நாத்தமா?" என்று முகம் சுளித்தது கிராமத்து காக்கா.

"சரி, வா கடைத்தெருவுக்குப் போய் ஏதாவது சாப்பிடுவோம்" என்றது நகரத்து காக்கா.

"சாப்பிடுறதுக்காக எதுக்கு கடைத்தெருவுக்குப் போகணும்" என்று கேட்டது கிராமத்து காக்கா.

"திருடி திங்கத்தான்"என்றது நகரத்து காக்கா.

"என்னது... திருடித் திங்கவா...? கிராமத்துல 'கா...கா...'ன்னு கூப்பிட்டு சாப்பாடு போடுறாங்க. இங்கே திருட்டு பிழைப்பா இருக்கே! ச்சீ... ச்சீ... எனக்கு வேண்டாம். நான் கிராமத்துக்கே போறேன். அங்கே கௌரவமா, நிம்மதியா வாழலாம்" என்று சொல்லிவிட்டு பறந்து சென்றது கிராமத்து காக்கா. அதை அப்பாவியாக பார்த்துக் கொண்டிருந்தது நகரத்து காக்கா!